**அமைப்புசாரா ஓட்டுநர்கள் வாரியத்தில் பதிவு செய்த பெண்கள் – திருநங்கைகள் 1000 பேருக்கு புதிய ஆட்டோ வழங்கிட தலா ரூ. 1 லட்சம் மானியம்!**

# 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு - ரூ.45 கோடியில் ‘திறன் மேம்பாட்டுப் பயிற்சி’!

## திருக்குவளை தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.3 கோடியில் புதிய மாணவர் விடுதி!

## சட்டப்பேரவையில் – ‘தொழிலாளர் நலன்’ மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் சி.வி.கணேசன் அறிவிப்பு

**சென்னை, ஏப். 11 -**

**சட்டப்பேரவையில் - தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சி.வி.கணேசன், “தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த, 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 800 ரூபாய் ஊதியத்துடன் ரூ.45 கோடியே 21 லட்சம் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்” என்பது உள்ளிட்ட 11 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் சி.வெ.கணேசன் அளித்த பதிலுரை வருமாறு:-

முதல்வர் அவர்களை வணங்கி, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1974ல் இந்தியாவில் உள்ள அனைத்து முதலமைச்சர்களுக்கும் சுதந்திரக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்று தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வழியில் வந்த நம்முடைய முதல்வர் அவர்கள், நேற்று உச்ச நீதிமன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க பத்து மசோதாக்களுக்கான தீர்ப்பை பெற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியது அல்ல. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் பெற்ற வெற்றி என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்காகவே போராடும், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெறும் என்பதற்கு நேற்று வந்த உச்ச நீதிமன்ற தீர்ப்பே சான்றாகும். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி உரிமையை பெற்றுத் தந்து நிலை நாட்டிய தமிழ்நாட்டிற்கு மாபெரும் பெருமையை தேடித்தந்து, இந்தியாவிற்கே வழிகாட்டி முதலமைச்சராக இருக்கின்ற முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

### முதல்வரின் கருத்தை இந்தியாவே எதிர்பார்க்கிறது!

பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்கு வித்திட்ட பகுத்தறிவு தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பெரிய விடியலுக்கு அவசியம், பேரறிஞர் அண்ணா பெரும் நாட்டின் அவசியம், கலைஞர் தமிழ், இனம், மொழிக்கு அவசியம், தலைவர் தளபதியோ இன்று தமிழ்நாட்டிற்கு அவசியம். (மேசையைத் தட்டும் ஒலி) உதயநிதி அவர்கள் உதயசூரியனுக்கு அவசியம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாறுதான் ஒவ்வொரு உடன்பிறப்புகளுக்கும் அவசியம். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.கழகம் இல்லாமல் தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் இல்லை, புரட்சிச் சட்டங்கள் இல்லை. எட்டிய தூரம் வரை தலைவர் தளபதியாருக்கு எதிரிகளே இல்லை, தளபதி உழைப்பிற்கு ஈடு இணை எவரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதியா, மதசார்பின்மையா, மாநில சுய ஆட்சியா, கூட்டாட்சியா, குடியுரிமை சட்டமா, இந்தி திணிப்பா, தொகுதி மறுசீரமைப்பா, வக்ஃப் சட்டமா, அனைத்திலும் இவர் என்ன நினைக்கிறார் என்றே இந்தியா பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுசெய்த மற்றும் பதிவு செய்யாத தொழிலாளர்களுக்கு பணியிடத்துவிபத்து மரண உதவித் தொகை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

பெண்கள் வீட்டின் கண்கள் மட்டுமல்ல, சமூதாய முன்னேற்றத்தின் ஆதாரம் என்று உணர்ந்து, அந்த சுய உதவிக் குழுவிற்கு காலை முதல் மாலை வரை கால் வலி பாராமல் சுழல் நிதி வழங்கிய சூரியனே! இன்று மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைபெண் திட்டம், மகளிருக்காக ஆட்டோ மானியம் வழங்கி பல புதுமைகளை படைக்கும் முதலமைச்சர் தளபதியை வணங்குகின்றேன்.

### தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை உலகறிய செய்தார்!

ஈரோடு எரிமலையாய் நடந்து வரும் இளைஞர் எங்களின் சின்ன கலைஞர், குறிஞ்சி மலரின் புத்திரர் என்பதை நிரூப்பிக்கும் வண்ணம் தந்தையின் கட்டளைகளை தலையில் ஏந்தி, தமிழ் மக்களின் நலனை மனதில் ஏந்தி, ஏற்றப்பொறுப்பினை வீறுடன் செயல்படுத்தி வரலாற்றில் தெற்கு ஆசியாவிலேயே முதன் முதலாக Formula 4 கார் பந்தயத்தை சென்னையில் வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர். (மேசையைத் தட்டும் ஒலி) Khelo India ஆடவர் ஹாக்கிப் போட்டி, முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் என்று பல போட்டிகளை தேசிய அளவிலும், உலக அளவிலும் நடத்தி, தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை உலகம் அறிய செய்தவர். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பிரிவு வீரர், வீராங்கனைகளை தேசிய அளவிலான, உலக அளவிலான வீரர், வீராங்கனைகளாக மாற்றுவதே என் இலட்சியம் என்று அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த வீரர் வீராங்கனைகளுக்கும் உலகத் தரத்தினாலான கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தியதோடு, பரிசுத் தொகைகளை பன்மடங்காக உயர்த்தி, ஊக்கத் தொகைகளை அதிகமாக வழங்கி, வேலை வாய்ப்புகளையும் வழங்கி, புதிய நம்பிக்கையும், ஊக்கத்தையும் கொடுத்து, விளையாட்டுத் துறையில் இந்தியாவில் தமிழ்நாடுதான் no.1 மாநிலம் என்று உருவாக்கி காட்டியவர். என் மீது வரும் விமர்சனங்களுக்கு என்னுடைய செயல்பாடுகளால், நடவடிக்கைகளால் மட்டுமே பதில் சொல்வேன் என்று சொல்லி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, விளையாட்டுத் துறையில் மற்றவர்கள் வியப்படையும் வகையில் வீரியத்துடன் செயலாற்றுக் கொண்டிருக்கும் என் நெஞ்சம் நிறைந்த ஆரூயிர் துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

நீர்வளத் துறை அமைச்சர், கழகப் பொதுச் செயலாளர் அவை முன்னவர் அவர்களுக்கும் மற்றுமுள்ள அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அவையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை ஒரு முறை நாடாளுமன்றத்திற்கும், நான்காவது முறையாக சட்டமன்றத்திற்கும், இரண்டு முறை மாவட்ட ஊராட்சிக்கும் அனுப்பிய திட்டக்குடி வாக்காளப் பெருமக்களுக்கும், கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சார்ந்த கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

நாடோறு நாடுக மன்னன்<br>
வினைசெய்வான்<br>
கோடாமை கோடா துலகு

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும் என்ற தலைவர் கலைஞர் அவர்களின் உரையைச் சொல்லி எனது உரையைத் தொடங்குகிறேன்.

### தொழிலாளர் நல அரசு!

தொழிலாளர் நலன்வரலாற்று சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் ஐந்தாவது முறையாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையை தாக்கல் செய்ய நல்ல வாய்ப்பினை வழங்கிய நம்முடைய வணக்கத்திற்குரிய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் மாநிலம் தமிழ்நாடு. தொழிலாளர் நலன் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு இடையேயான சம நிலையைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது நமது அரசு. நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து தொழில் அமைதியை எப்போதும் பேணிக் காத்து வருகிறது. மாநிலத்தில் தொடர் உற்பத்தியை உறுதி செய்யவும், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுத்திடவும் தொழில் அமைதி அவசியமானதாகும்.

தொழிலாளர் நலச் சட்டங்கள், சமரச ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றை உறுதியாக அமல்படுத்திட வேண்டுமென்பதில், நமது முதல்வரின் அரசு கவனத்துடன் செயலாற்றி வருகிறது. அந்த அடிப்படையில் 49 நிறுவனங்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் சமரச அலுவலர்களின் பேச்சுவார்த்தைகளின்மூலம் விலக்கிக்கொள்ளப்பட்டன. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 8,373 தொழிற்தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டு, தொழிலாளர் நல அரசாக நமது அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து தொழிலாளர் நலன்களுக்காக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுவரை 24 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பணிக்கொடை1972 ஆம் ஆண்டு பணிக்கொடை பட்டுவாடா சட்டத்தின்படி தொழிலாளர்கள் தாக்கல் செய்த 2,368 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, பணிக்கொடை தொகையாக 16,95,66,342 ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. பணியின்போது ஏற்படும் விபத்துகள் காரணமாக ஏற்படும் ஊனம், இறப்பு ஆகியவற்றால் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அடையும் துயரினை கருத்தில் கொண்டு, தொழிலாளர் துறை அலுவலர்கள் பணியாளர் இழப்பீட்டு சட்டங்களின் கீழான வழக்குகளை விரைவாக முடித்து வருகின்றனர். இதன் காரணமாக பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின்கீழ் 2,119 வழக்குகள் முடிக்கப்பட்டு 89,61,63,241 ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக பெற்று தந்த அரசு தளபதி அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

### குழந்தை தொழிலாளர் ஒழிப்பு!

இதுபோன்று, குழந்தைகளை கல்வியில் ஆர்வம் கொள்ள செய்யும் நோக்கத்துடன், உலகத்தின் முன்னோடி திட்டமாக, காலை உணவுத் திட்டத்தை கொண்டு வந்த நம்முடைய முதல்வர் அவர்கள், குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பதிலும், கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழிப்பதிலும் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து



வருகிறது தமிழ்நாடு அரசு. அனைத்து துறை அலுவலர்களுடன் ஒன்றிணைந்து குழந்தை தொழிலாளர் முறையினை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அமலாக்க அலுவலர்களால் 34,345 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 60 குழந்தைத் தொழிலாளர்களும், 283 வளரிளம் பருவத் தொழிலாளர்களும், 120 கொத்தடிமைத் தொழிலாளர்களும் மீட்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் தொழிலாளர் முறையினையும், 2030 ஆம் ஆண்டிற்குள் கொத்தடிமைத் தொழிலாளர் முறையினையும் தமிழ்நாட்டில் அகற்றியே தீர வேண்டும் என்ற நமது முதல்வரின் குறிக்கோளினை முழுமையாக நிறைவேற்றுவோம் என்பதனை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு வாரியங்களை உருவாக்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், அமைப்பு

**கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன் கூடிய 50 வசதி மையங்கள் 20 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

சார்ந்த தொழிலாளர்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியத்தினை நிறுவினார் நம் தலைவர் கலைஞர். அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்கிப் பயனடையும் வகையில் குறைந்த வாடகையில் குற்றாலம், வால்பாறை மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக சென்னையில் ஜீவா இல்லத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம்.

சட்டமுறை எடையளவுகள் சட்டம்நுகர்வோர் நலனைப் பாதுகாக்க எடையளவுகள் சட்டத்தை சிறப்பாக தொழிலாளர் துறை செயல்படுத்தி வருகிறது. நுகர்வோர்களுக்கு விற்கப்படும் அனைத்துப் பொருட்களும் தகுந்த எடையிலும், எண்ணிக்கையிலும், அதிகபட்ச விலைக்கு மிகாமல் விற்கப்படுகிறதா என்பதையும் உறுதி செய்வதற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த நிதியாண்டில் மட்டும் 47,769 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 8,063 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இசைவுத் தீர்வு முறையில் தீர்வு செய்த வகையில், இணக்கக் கட்டணமாக 1,36,41,000 ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

மேலும், எடையளவுகள் முத்திரையிட்ட தன்மூலம் முத்திரைக் கட்டணமாக ரூபாய் 67.56 கோடியும், எடையளவு உரிமங்கள் மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக ரூபாய் 31.88 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

### அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள்:

உழைக்கும் வர்க்கத்தில் 90 விழுக்காட்டிற்கு மேல் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களுக்காக பல்வேறு நலவாரியங்களை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்பு கின்றேன்.

உலகை கட்டமைக்கும் தொழிலாளர்களின் வாழ்வை கட்டமைப்பதற்காக, நமது முதல்வரின் ஆட்சியில் தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் உருவாக்கி தந்துள்ளார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, Swiggy, Zomato, Amazon போன்ற இணையதளம் வாயிலாக பொருட்கள் விநியோகம் மற்றும் சேவைகள் வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு இணையம் சார்ந்த gig தொழிலாளர்கள் நலவாரியத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி தந்திருக்கிறார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

தமிழ்நாடு இணையம் சார்ந்த gig தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2,000 தமிழ்நாடு இணையம் சார்ந்த gig தொழிலாளர்களுக்கு ரூபாய் 4 கோடி செலவில் புதியதாக escooter வாங்கும் செலவினத்தில் தலா ரூ.20,000/ மானியமாக வழங்கப்படும் என்ற திட்டத்தினையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் 1.5 இலட்சம் gig தொழிலாளர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஓய்வுக் கூடங்கள் சென்னை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களில் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள், திருநங்கைகள் 1,500 பேருக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் ஒரு பெண் ஆட்டோ ஓட்டுநருக்கு ரூ.1 இலட்சம் மானியமாக வழங்க உத்தரவிட்டுள்ளார் நம்முடைய முதலமைச்சர் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, 1,000 பேருக்கு கொடுப்பதில், ஒரு பெண் ஆட்டோ ஓட்டுநருக்கு மட்டும் ரூ.1 இலட்சம் இலவசமாக வழங்கப்படும் என நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 752021 முதல் 3132025 வரை 20,75,156 புதிய உறுப்பினர்கள் வாரியங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். 752021 முதல் 3132025 வரையிலான காலத்தில் 28,87,382 தொழிலாளர்களுக்கு ரூ.2460, 81,34,703/ மதிப்பிலான பணப் பலன்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழில்களில் 4,37,750 தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ஏற்கெனவே ரூ.1,000 கொடுத்துக் கொண்டிருந்தோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு ஓய்வூதியம் ரூ.1,200/, ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன் கருதி, தொழிலாளர் ஆணையர் தலைமையில் மாநில அளவிலான புலம்பெயர்ந்த தொழிலாளர் ஆலோசனைக் குழுவும், கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் தலைமையில் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களையும் அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில் பணிபுரியும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்திட இணையவழி தரவுதளம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அமைப்பு சாரா தொழிலாளர் வாரியம்!

மிக முக்கியமான ஒரு செய்தி. உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அடிக்கடி தொழிற்சங்க பிரதிநிதிகளெல்லாம் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதற்கான ஒரு சின்ன செய்தி. இந்த நேரத்தில் நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றிய அரசாங்கம் கொண்டுவரும் சட்டத் தொகுப்புகளினால் பாதிப்பு ஏற்படா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பல்வேறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பல்வேறு அமைப்பு சாரா தொழிலாளர் வாரியங்கள் தொடங்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தியாவிலேயே, உலகத்திலேயே அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களை உருவாக்கிய பெருமை தலைவர் கலைஞருக்கு உண்டு. அதை சிறப்பாக நடத்துகின்ற அரசும், தமிழ்நாடு அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு முக்கியமான செய்தி. இவ்வாரியங்களில் 47 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளார்கள். ஆண்டுதோறும் 800 கோடி ரூபாய்க்குமேல் அதிகமான நலத் திட்ட உதவிகள் தொழிலாளர்களுக்கு செய்யப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசு கொண்டு வருகின்ற சட்டத் தொகுப்பினால் பாதிப்பு வரும் என்று அச்சத்துடன் இருக்கிறீர்கள் அல்லவா! அதனால் முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது ஆண்டுதோறும் 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான நலத் திட்ட உதவிகளை தொழிலாளர்களுக்கு செய்து வருகின்ற தமிழ்நாடு அரசாங்கம் அமைப்புசாரா வாரியங்களின்மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நலத் திட்டங்கள் தங்குதடையின்றி, எந்தவித பாதிப்பும் இல்லாமல் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்புத் துறை. வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காகவும், தனியார் துறைகளில் வளர்ந்து வரும் மனித தேவைகளை அறிந்து நமது முதலமைச்சர் அவர்கள் தனியார் துறையுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம் நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டு, அதனடிப்படையிலே வேலைவாய்ப்பு முகாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். முதல்வர் அவர்கள் சென்னையில் புது கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நமது முதல்வர் அவர்களுடைய திருக்கரத்தால் ஒரு இலட்சமாவது இளைஞருக்கு பணி நியமன ஆணையை வழங்கினோம் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### வேலை வாய்ப்பு முகாம்!

தொடர்ந்து மாநில கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நமது துணை முதலமைச்சர் அவர்கள் 1,50,000வது பணி நியமன ஆணையை வழங்கினார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். இதுவரை 309 மெகா வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 2,49,392 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விரைவில் 2,50,000வது பணி நியமன ஆணையை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது திருக்கரங்களால் வழங்கப்படும் என்பதை பணிவோடுத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றிய அரசின் பணிகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகளவில் வெற்றி பெறுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் நுண் திறன் வகுப்பறை WiFi மற்றும் smart board வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்விளைவாக 75,200 மாணவர்கள் பலனடைந்துள்ளனர். இவர்களில் 6,615 மாணவர்கள் போட்டித் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பயிற்சித் துறை. தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலர் அளவிற்கு உயர்த்தவும், அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் முதல்வர் அவர்கள் தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த உயரிய இலட்சியத்தை நிறைவேற்ற தரமான பயிற்சி பெற்ற தொழிலாளர்களை தொழிற்சாலைகளுக்கு வழங்கவும், இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு பெற்று தரவும், 20212022 ஆம் ஆண்டில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும், 20222023 ஆம் ஆண்டில் 11 தொழிற்பயிற்சி நிலையங்களும், 20242025 ஆம் ஆண்டில் 13 தொழிற்பயிற்சி நிலையங்களும், இந்த நிதியாண்டில் 17 தொழிற்பயிற்சி நிலையங்களையும் அளித்து இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 42 தொழிற்பயிற்சி நிலையங்களை அமைக்க நமக்கு அனுமதி அளித்து உதவிய முதலமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார். இதற்கு என்ன காரணம் என்றால் இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்து நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய, அவர்களுக்கு அறிவையும் பயிற்சியையும் அளித்து இன்றைக்கு கொண்டுவரப்படுகின்ற எல்லா தொழிற்சாலைகளிலும் பணியாற்றக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகதான் 75 ஆண்டுகளில் 90 தொழிற்பயிற்சி நிலையம், 4 ஆண்டுகளில் 42 தொழிற்பயிற்சி நிலையத்தை உருவாக்கித் தந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

20242025 ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 93 சதவிகித மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுள்ளன என்பதையும், கடந்த ஆண்டு இதுவரை கண்டிராத அளவில் 90.7 சதவிகித பயிற்சியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு தொழிற்பயிற்சி பயிற்றுநர்களுக்கு கடந்த ஆண்டில் நவீன தொழில்நுட்பங்களில் பல முன்னணி நிறுவனங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. TANSAM, TANCAM, NPTL, WRI, L&T போன்ற முன்னணி நிறுவனங்களில் 664 பயிற்றுநர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயிற்சியாளர்களுக்கு நவீன தொழில் நுட்பங்கள் பயிற்றுவிக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. நமது முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் 71 தொழிற்பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு மற்றும் திறன் கற்பித்தலை மேம்படுத்தும் இலட்சியத் திட்டமான Tata Technologies உடன் இணைந்து 2,877 கோடி ரூபாய் செலவில் தொழிற்பயிற்சி நிலையங்கள் 4.0 தரத்தில் உயர்த்தப்பட்டது. இது உலகத்தில், இந்தியாவில் எங்குமே இல்லை. அதாவது, மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகளெல்லாம் வந்து பார்த்து, தமிழ்நாட்டில் எப்படி ITIகளெல்லாம் நடைபெறுகிறது. எப்படி இதெல்லாம் சாத்தியமானது. எப்படி முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள் என்பதை மற்ற மாநிலங்களில் இருந்து வந்து பார்த்துவிட்டு சென்று அந்த மாநிலங்களில் இதை நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் இந்திய வரலாற்றில் எந்தவொரு மாநிலத்திலும் ITIயைத் தரம் உயர்த்துவதற்காக 2,877 கோடி ரூபாய் பெற்றுத் தந்த முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அகில இந்திய தொழில் தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 மாணவர்கள் பல்வேறு தொழில் பிரிவுகளில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் 4.0 தரத்திலான தொழிற் பிரிவுகளில் முதல் வருடத்திலேயே, நான் சொன்னேன் அல்லவா, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த திட்டத்தினால் ரூ.2877 கோடி கொண்டுவந்த அந்த பயிற்சி நிலையங்களில் முதலாண்டில் சேர்ந்தவர்களில் 2 மாணவர்கள், அதாவது முதல் வருடத்திலேயே 2 மாணவர்கள் Industrial robotics and digital manufacturing technician தொழிற்பிரிவிலும், 2 மாணவர்கள் Manufacturing process control and automation தொழிற் பிரிவிலும் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர் என்பதை பெருமையோடு இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல இதுபோன்று முதலிடம் பெற்ற கராணத்தால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பல்வேறு வேலைப்பளுவிலும் அந்த மாணவர்களை அழைத்து நேரில் பாராட்டினார் என்பதையும் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### பெண் தொழிலாளர்கள் அதிகம் உள்ள மாநிலம்!

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம். 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, அதிக எண்ணிக்கையில், 52,614 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டும், இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண் தொழிலாளர்களில், தமிழ்நாட்டில் மட்டும் 42 சதவீதம் என்ற அளவிலும், முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்கு காரணம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அமைதியான தொழிற்சூழல், திறன் மிகுந்த தொழிலாளர்கள், வலுவான கட்டமைப்பை கொண்டுள்ளது. இதனால் வாகன உற்பத்தி, மின்னணு பொறியியல், மருத்துவம், ஜவுளி மற்றும் தோல் பொருட்கள் போன்ற துறைகளில் அதிகமான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

பட்டாசு தொழில். தமிழ்நாட்டில் 1,578 பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலைகளில் 59,477 தொழிலாளர்கள் நேரடியாகவும், சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மறைமுகமாகவும் பணிபுரிந்து வருகின்றனர். பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளின் விளைவாக, ஏற்படும் ஒவ்வொரு உயிர் இழப்பின் போதும் நமது முதல்வர் அவர்கள் மிகுந்த வேதனையடைந்து, தனது வலியை வெளிப்படுத்தி, இது போன்ற விபத்துகள் ஏற்படாமல் இருப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். 20242025 ஆம் நிதியாண்டில் விதிமீறல்கள் கண்டறியப்பட்ட பட்டாசு தொழிற்சாலைகளுக்கு எதிராக 784 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, 1,37,25,500 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

மேலும், பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, பிரச்சார வாகனம்மூலம் பாதுகாப்பு பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றன. அந்த பட்டாசு தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கும் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயிற்சிகளின் வழியாக 15,799 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். கட்டுமானத் தொழிலாளர்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு குறித்து குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திரையிடப்பட்டு வருகின்றன. மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் தீ மற்றும் தொழிலகப் பாதுகாப்பு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஆண்டுதோறும் அவ்வப்போது, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் தீ விபத்து ஏற்படும். பல்வேறு உயிர்கள் பலியாகின்றன. இதனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னையெல்லாம் அழைத்து இனிமேல் அதிகமான அளவிற்கு பாதிப்பில்லாமல் அந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு மேற்பார்வையிட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனாலும், அந்த வலிகளைத் தாங்கிக் கொள்ள முடியாத நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரடியாக 10112024 அன்று விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தொழிற்சாலைகளை ஆய்வு மேற்கொள்வதற்காக வருகை தந்தார்கள். அப்போது நம்முடைய நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , வருவாய்த் துறை அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன் வருகை தந்தார்கள். நானும்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்